**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.107** **நாள் : 31.07.2019**

**தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் விதத்தில் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே முறையாக கைகழுவும் பயிற்சி மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக தூய்மை இந்தியா திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகள், தொழிற் நிறுவனங்கள். குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாக கூடும் இடங்களில் மாநகராட்சி ஆணையர் ஜி. பிரகாஷ், இ,ஆ,ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 1700 மாணவியர்கள் மற்றும் 74 ஆசிரியர்களுக்கு தூய்மை இந்தியா திட்டம் மற்றும் முறையாக கைகழுவும் பயிற்சி குறித்து விழிப்புணர்வு முகாம் இன்று (31.07.2019) நடத்தப்பட்டது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவுவதன் மூலம் 50% வயிற்றுப் போக்கு, 25% நிமோனியா காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை A & D, சாதாரணமான சளித்தொல்லை, சுவாச தொற்று நோய்கள், பன்றிக் காய்ச்சல், காலரா, வயிற்றுப் பூச்சிகள், தோல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோயிலிருந்தும் பொதுமக்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். பொதுவாக தண்ணீரை மட்டும் உபயோகித்து கைகளை கழுவுவதினால் மட்டும் நோய்க் கிருமிகளை அழிக்க முடியாது. சோப்பு உபயோகித்து 20 நொடிகள் முறைப்படி கழுவுவதினால் நோய்க் கிருமிகளை அழிக்க முடியும் என்று விளக்கிக் கூறப்பட்டு, மாணவ, மாணவியர்களுக்கு முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவும் 10 நிலைகள் கொண்ட செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்னர், மாணவ, மாணவியர்கள் அனைவரும் முறையாக சோப்பு உபயோகித்து கைகளை கழுவினர்.

மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், அதனை நிறைவேற்றுவதில் மாணவ, மாணவியர்களின் பங்கு, குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என்று வகைப்பிரித்து அளித்தலின் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது. இறுதியில், மாணவ, மாணவியர்கள் அனைவரும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று வகைப்பிரித்து அளிப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி..சீனிவாசன், மண்டல அலுவலர் திரு.எஸ்.சங்கர், செயற்பொறியாளர் திரு.வி.சின்னதுரை மற்றும் தலைமையாசிரியை திருமதி ஆர்.. பத்மஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**